# மார்ச் - 08 - வியாழன்

**தூய இறை அருளப்பர்**

**நன்றியுடன் அவர் திருமுன் செல்வோம்: புகழ்ப்பாக்களால் அவரைப் போற்றி ஆர்ப்பரிப்போம். திபா. 95:2**

## முதல் வாசகம் : ஏரேமியா 7 : 23 – 28

ஆண்டவர் கூறியது : நான் இஸ்ரயேலுக்குக் கொடுத்த கட்டளை இதுவே. என் குரலுக்குச் செவி கொடுங்கள் அப்போது நான் உங்களுக்குக் கடவுளாய் இருப்பேன். நீங்கள் எனக்கு மக்களாய் இருப்பீர்கள். நான் கட்டளையிட்ட நெறிகள் அனைத்தையும் கடைப்பிடியுங்கள். அது உங்களுக்கு நலம் பயக்கும். அவர்களோ செவி சாய்க்கவும் இல்லை கவனிக்கவும் இல்லை பிடிவாத குணமுடைய அவர்களின் தீய உள்ளத்தின் திட்டப்படி நடந்தார்கள் முன்னோக்கிச் செல்வதற்குப் பதில் பின்னோக்கிச் சென்றார்கள். உங்கள் மூதாதையர் எகிப்து நாட்டிலிருந்து வெளியேறிய நாளிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு நாளும் தொடர்ந்து என் ஊழியர்களாகிய இறைவாக்கினர்களை உங்களிடம் அனுப்பியுள்ளேன். அவர்களோ எனக்குச் செவிசாய்க்க வில்லை கவனிக்கவில்லை. முரட்டுப் பிடிவாதம் கொண்டு தங்கள் மூதாதையரைவிட அதிகத் தீச்செயல் செய்தனர். நீ அவர்களிடம் இச்சொற்களை எல்லாம் கூறுவாய் அவர்களோ உனக்குச் செவிசாய்க்க மாட்டார்கள். நீ அவர்களை அழைப்பாய் அவர்களோ உனக்குப் பதில் தரமாட்டார்கள். தங்களின் கடவுளாகிய ஆண்டவரின் குரலைக் கேளாத, அவர் தண்டித்தும் திருந்தாத இனம் இதுவே, என அவர்களிடம் சொல். உண்மை அழிந்து போயிற்று. அது அவர்கள் வாயிலிருந்து அகன்று போயிற்று.

**பதில்பாடல் :** உங்கள் இதயத்தைக் கடிணப்படுத்தாதீர்.
ஆண்டவர் குரலைக் கேட்டிடுவீர்

## நற்செய்தி : லூக்கா 11 : 14 – 23

அக்காலத்தில் ஒரு நாள் இயேசு பேச்சிழந்த ஒருவரிடமிருந்து பேயை ஓட்டினார். பேய் வெளியேறவே, பேச்சற்ற அவர் பேசினார். கூட்டத்தினர் வியந்து நின்றனர். அவர்களுள் சிலர், "பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான்" என்றனர். வேறு சிலர் அவரைச் சோதிக்கும் நோக்குடன், வானத்திலிருந்து ஏதேனும் ஓர் அடையாளம் காட்டுமாறு அவரிடம் கேட்டனர். இயேசு அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து, அவர்களிடம் கூறியது "தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப்போகும். அவ்வாறே பிளவுபடும் வீடும் விழுந்துவிடும். சாத்தானும் தனக்கு எதிராகத் தானே பிளவுபட்டுப் போனால் அவனது அரசு எப்படி நிலைத்து நிற்கும்? பெயல்செபூலைக் கொண்டு நான் பேய்களை ஓட்டுகிறேன் என்கிறீர்களே. நான் பெயல்செபூலைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறேன் என்றால் உங்களைச் சேர்ந்தவர்கள் யாரைக் கொண்டு பேய் ஓட்டுகிறார்கள்? ஆகவே அவர்களே உங்கள் கூற்று தவறு என்பதற்குச் சாட்சிகள். நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகிறேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா! வலியவர் ஆயுதம் தாங்கித் தம் அரண்மனையைக் காக்கிறபோது அவருடைய உடைமைகள் பாதுகாப்பாக இருக்கும். அவரைவிட மிகுந்த வலிமையுடையவர் ஒருவர் வந்து அவரை வென்றால் அவர் நம்பியிருந்த எல்லாப் படைக் கலங்களையும் பறித்துக்கொண்டு, கொள்ளைப் பொருளையும் பங்கிடுவார். "என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார் என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறச் செய்கிறார்" என்றார்.

**தியானம்:** கடவுளின் ஆட்சியை அறிவித்த இயேசு நாம் அந்த ஆட்சியில் நுழையவிடாமல் தடுக்கின்ற சக்திகளை பற்றியும் நம்மை எச்சரிக்கின்றார். கடவுளின் சக்தியை எதிர்க்கின்ற சக்திகள் தோல்வியடைந்துவிடும், இயேசுவின் பணியை தொடர்ந்து நாம் செய்ய முன்வராவிட்டால் படிப்படியாக நாம் கடவுளைவிட்டு விலகிப்போகின்றோம் என்பதை இயேசு சுட்டிக்காட்டுகின்றார். நம்மை விட்டு விலகிப்போன தீய ஆவி மீண்டும் நம்மைத் தேடி வந்துவிட்டால் அதை எதிர்த்துப் போராட நமக்கு இன்னும் அதிகமான சக்தி வேண்டும். எனவே தான் எப்போதும் இயேசுவோடு இணைந்திருந்து செயல்படவும் தீய ஆவிக்கு நம் உள்ளத்தில் இடம்கொடாமல் இருக்கவும் அழைக்கப்டுகின்றோம். இயேசு புரிந்த புதுமைகள் அதிசயமான செயல்களாக மக்களுக்கு தெரிந்தன. அவ்வாறு மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கும் மேலாக இயேசு செயல்பட்டதால் அவர்களில் சிலர் அவரை தவறாக புரிந்து கொண்டு 'பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலைக் கொண்டே பேய்களை ஓட்டுகின்றார்' என முடிவு செய்தனர். கடவுளின் வல்லமை இயேசு வழியாக வெளிப்பட்டது என ஏற்றுக்கொண்டால் இயேசு அறிவித்த செய்தியையும் ஏற்கவேண்டியிருக்கும். ஆனால் கடவுளின் வல்லமைக் எதிராக செயல்படுகின்ற தீய ஆவிகளின் உதவியோடு இயேசு செயல்பட்டார் என முடிவுசெய்துவிட்டால் கடவுளாட்சி பற்றி இயேசு அறிவித்த செய்தியையும் ஏற்கதேவையில்லை. இவ்வாறு நினைத்தவர்கள் இயேசுவிடமிருந்து "வேறு அடையாளம்" எதிர்பார்த்தார்கள். இறைவா உம் வல்லமை எம் வாழ்வில் துலங்குவதைக் கண்டு கொள்ள அருள்தாரும் ஆமென்.